# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை மக்கள் சாசனம்

## 1. முன்னுரை

தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறையால் வழங்கப்படும் சேவைகள் குறித்து இந்தியக் குடிமக்களுக்கு அளிக்கப்படும் தகவல் அறிக்கை.

மேம்படுத்தப்பட்ட சாலைப் பராமரிப்பின் மூலம் வாகன இயக்க செலவை குறைத்தல், விபத்துக்களை குறைத்தல், மாநிலங்களுக்கு இடையேயும், கிராமங்களிலிருந்து நகரங்களுக்கும் சாலை வசதி ஏற்படுத்தி விரைவான போக்குவரத்தை உறுதிசெய்தல் போன்றவை நெடுஞ்சாலைத் துறையின் குறிக்கோளாகும்.

தமிழ்நாடு கடல்சார் வாரியம் தமிழ்நாட்டின் சிறுதுறைமுகங்கள் ஏற்றுமதி இறக்குமதி மூலம் துறையின் வளர்ச்சியில் முக்கிய பங்கினை வகிக்கிறது.

பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகம், அனல்மின் நிலையங்களுக்கு தேவையான நிலக்கரியை கப்பல்கள் மூலம் எடுத்து வரும் பணியை செய்கிறது.

## 2. நெடுஞ்சாலைகள் துறையின் இலக்கு

சாலைகளின் கொள்ளளவை அதிகரிக்கவும், அனைத்து இடங்களை இணைக்கும் வகையிலும், திறனான மற்றும் விபத்தில்லா பாதுகாப்பான பயணத்திற்கு ஏற்ற சாலைகளை அமைத்து மாநிலத்தின் அனைத்து தரப்பு மக்களின் மற்றும் பகுதிகளின் சமநிலை சமூக-பொருளாதார வளர்ச்சியினை அடைய உதவுவதே நெடுஞ்சாலைத்துறையின் கொள்கையாகும்.

நெடுஞ்சாலைத் துறை பின்வரும் குறிக்கோள்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

அ) மாநிலத்திலும் மற்றும் நாட்டின் பிறபகுதிகளையும் திறனான சாலைகள் மூலம் இணைப்பதன் வாயிலாக தங்கு தடையற்ற மற்றும் குறைவான செலவில் போக்குவரத்தை உறுதிசெய்தல்.

ஆ)முதலமைச்சரின் தொலைநோக்கு திட்டம் மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்கு – 2030-ல் உள்ள மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றுதல்.

இ) அனைத்து கிராமங்களுக்கும் சாலை வசதி அளிப்பதன் மூலம் கிராம மக்களின் பொருளாதார மேம்பாட்டினை அதிகரித்தல்.

ஈ) வெள்ள காலங்களில் தங்குதடையற்ற போக்குவரத்தை உறுதி செய்வதற்காக அனைத்து தரைமட்டப் பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக மாற்றுதல்.

உ) நெடுஞ்சாலைத் துறையின் பொறுப்பில் உள்ள சாலைகள் மற்றும் பாலங்களில் பொதுமக்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் அனுமதியற்ற ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.

ஊ) சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், உலக வெப்பமயமாதலை தடுக்கவும் அனைத்து சாலைகளின் மரக்கன்றுகள் நடுதல்.

## 3. சேவைகள்

"முதல்வரின் முகவரி" என்ற துறை எளிமையான பொது மக்கள் குறை தீர்க்கும் துறையாக உருவாக்கப்பட்டுள்ளது.

## இத்துறையின் சேவைகள்:

- அரசு சேவைகள், திட்டங்கள், அடிப்படை சேவைகள் குறித்து மனுக்கள் மற்றும் புகார்கள் அளித்து அவைகளை கண்காணிக்கலாம்.
- பொது மக்கள் குறைகளை helpline, இணையதளம், கைபேசி செயலி, மின்னஞ்சல் மூலமாகவும், முகநூல், கீச்சகம் (Twitter) போன்ற சமூக ஊடகம் மூலமாகவும், அல்லது தபால் மூலமாகவும் பதிவு செய்யலாம்.
- பொது மக்கள் கேள்விகள், சந்தேகங்கள் எழுப்பலாம் மற்றும், கருத்துக்களை பதிவு செய்யலாம் மற்றும் முதல்வரின் அறிவிப்புகளையும், இதர அறிவிப்புகளையும் தெரிந்து கொள்ளலாம்.

- முதல்வரின் முகவரி திட்டத்தின் கீழ் பொதுமக்கள் தங்களுக்கு தேவைப்படும் விவரங்களை அறிந்து கொள்ளவும், குறைகளை தெரிவிக்கவும், கருத்துக்களை தெரிவிக்கவும், மேம்பட்ட பயனுள்ள சேவைகள் குறித்த கருத்துக்களை வழங்கவும் அனைத்து அலுவலர்களையும் தொடர்பு கொள்ளலாம்.
- நெடுஞ்சாலைத்துறையில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள்/கோரிக்கைகளை உரிய முறையில் பரிசீலிக்கும் வகையில் கோட்ட வாரியாக நியமன அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- "முதல்வரின் முகவரி" சேவைகளுக்காக கோட்டம் வாரியாக நியமிக்கப்பட்டுள்ள நியமன அலுவலர்கள் குறித்த விவரம் www.cmhelpline.tnega.org என்ற இணையதளத்தில் காணலாம்.

## 4. வெளிப்படைத் தன்மை

துறையின் அனைத்து செயல்பாடுகள் பற்றிய விவரங்கள் எளிதில் அறிந்து கொள்வதற்கு

வசதியாக www.tnhighways.gov.in என்ற இணையதளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இத்துறையானது, வெளிப்படையான மற்றும் திறனான செயல்பாடுகளுக்காக மின் ஆளுகை (e-governance) நடைமுறைகளை செயல்படுத்தி, துரிதமான மற்றும் தரமான சேவைகளை பொதுமக்களுக்கு வழங்கி வருகிறது.

## 5. வழிகாட்டும் நெறிமுறைகள்

இத்துறையின் அனைத்து செயல்பாடுகளும் கீழ் குறிப்பிட்டுள்ள பல்வேறு சட்டங்கள், ஒழுங்கு முறைகள் மற்றும் கையேடுகள் ஆகியவற்றின் வழிகாட்டுதல்களின் படி நடைபெறுகின்றன.

1. தமிழ்நாடு வரவு செலவு திட்டம் கையேடு.
2. தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016.
3. தமிழ்நாடு குடிமை பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதிகள்.
4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள், 1973.
5. தமிழ்நாடு ஓய்வு ஊதிய விதிகள்.

6. தமிழ்நாடு அரசின் அடிப்படை விதிகள்.
7. தேசிய நெடுஞ்சாலைகள் சட்டம், 1956.
8. தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி சட்டம்,1998.
9. தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம், 2001.
10. தமிழ்நாடு நெடுஞ்சாலை விதிகள் 2003.
11. தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் நடைமுறை நூல்.
12. தமிழ்நாடு நிதி விதி தொகுப்பு.
13. தமிழ்நாடு கணக்கு விதி தொகுப்பு.
14. தமிழ்நாடு கருவூல விதி தொகுப்பு.
15. தமிழ்நாடு நெடுஞ்சாலை பொறியியல் பணி விதிகள்.
16. தமிழ்நாடு நெடுஞ்சாலை பொறியியல் சார் நிலைப்பணி விதிகள்.
17. தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள்.
18. தமிழ்நாடு பொதுப் பணி விதிகள்.
19. இந்திய சாலைகள் குழுமத்தின் விதி தொகுப்பு.

20. சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட விவர குறிப்பு.

21. பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையால் வெளியிடப்பட்ட தரப்படுத்தப்பட்ட பணி விவர தொகுப்பு (Standard Data).

22. தமிழ்நாடு பொதுப்பணித் துறையால் வெளியிடப்பட்டுள்ள செந்தர விலைப்பட்டியல்.

23. தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறையால் வெளியிடப்பட்டுள்ள செந்தர விலைப்பட்டியல்.

24. இந்திய தர நிறுவனங்களால் வெளியிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் விவரக் குறிப்பு.

## 6. தரக்கட்டுப்பாடு

நெடுஞ்சாலை கட்டுமானத்தின் பல்வேறு நிலைகளில் தரத்தை உறுதிசெய்யவும், நிலைத்து நிற்கக்கூடிய உட்கட்டமைப்பினை உருவாக்கவும் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. இதற்காக மூன்றடுக்கு தரக்கட்டுப்பாடு அமைப்பு துறையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால் வெளியிடப்படும் விவரக் குறிப்புகள் / வழிகாட்டுதல்கள் / இந்திய சாலைகள் குழுமத்தின் விதித் தொகுப்புகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வரைமுறைகளைக் கொண்டு நெடுஞ்சாலைத்துறை பணிகள் தொடர்பான அனைத்துச் சோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், பணிகளின் திறமையான திட்டமிடல், செயலாக்கம், மேற்பார்வைக்காக இணையதள அடிப்படையிலான இ-பாதை என்னும் மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இது இத்துறை வெளிப்படையாகச் செயல்பட உதவுகிறது.

நெடுஞ்சாலைகளில் பெட்ரோல் பங்குகள் அமைப்பதற்கான தடையின்மைச்சான்று வழங்க விதிமுறைகள் அரசாணை (நிலை) எண்.25, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.என்.2) துறை நாள் 24.02.2022-ல் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகளை www.tn.gov.in என்ற இணையதளத்தில் காணலாம்.

## 7. சாலை பாதுகாப்பு

சாலை பாதுகாப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாகக் காவல்துறை, சுகாதாரத்துறை மற்றும் போக்குவரத்துத் துறையினரின் ஒருங்கிணைப்போடு சாலை விபத்து தரவு தளம் i-RAD உருவாக்கப்பட்டுள்ளது. இது சாலையில் அடிக்கடி விபத்து நிகழும் பகுதிகளைக் கண்டறிந்து, ஆய்வு செய்து தகுந்த சாலை பாதுகாப்பு தொடர்பான பொறியியல் நடவடிக்கைகளைத் தெரிவு செய்ய உதவுகிறது.

விபத்தில்லா தமிழகத்தை உருவாக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட "இன்னுயிர் காப்போம்" என்ற திட்டத்தின் கீழ் சாலைப்பாதுகாப்பு ஆணையம், நம்மைக் காக்கும் 48, அவசர கால மருத்துவ சேவைக்களுக்கான சட்டம், உதவி செய் திட்டம், சீரான சாலைகள் மற்றும் விரிவான தகவல், கல்வி தகவல் தொடர்பு, விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஆகியவற்றை செயல்படுத்துவதற்கு சாலை பாதுகாப்புக்கான சிறப்பு பணிக்குழு (STF-RS) அமைக்கப்பட்டுள்ளது.

## 8. தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம்

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் கட்டுப்பாட்டில் தூத்துக்குடியில் உள்ள தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம் இந்திய அரசின் கப்பல் துறை தலைமை இயக்குநர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்ட கீழ்கண்ட பயிற்சிகளை மாணவர்களுக்கு நடத்தி வருகிறது.

I. தன்னிலை பாதுகாப்பு உக்தி (Personal Survival Techniques)

II. தொடக்க முதலுதவி (Elementray First Aid)

III. தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புணர்வு (Personal Safety and Social Responsibility)

IV. எண்ணெய் மற்றும் இராசயனக் கப்பல் சரக்கு கையாளுதல் (Oil & Chemical Tanker Cargo Operations).

V. தீயணைப்பு அடிப்டை பாதுகாப்புப் பயிற்சி (Fire Prevention and Fire Fighting)

VI. கடல் மாலுமிகளுக்கான பாதுகாப்புப் பயிற்சி (Security Training for Seafarers)

## 9. படகு போக்குவரத்து சேவை:

கன்னியாகுமாரியில் 150 இருக்கைகள் கொண்ட மூன்று படகுகள் மூலம் விவேகானந்தர் பாறை முதல் அய்யன் திருவள்ளுவர் சிலை வரை படகு போக்குவரத்து பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகத்தால் செயல்படுத்தப்படுகிறது.

## 10. தகவல் அறியும் உரிமை

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் படி தகவல் அளிக்க நியமிக்கப்பட்ட பொது தகவல் அலுவலர்கள் குறித்த விவரம், துறை, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாமாக முன் வந்து அளிக்கப்பட்ட விவரங்கள் www.tn.gov.in www.tnhighways.gov.in, www.tnrsp.gov.in, www.ckicp.tnhighways.gov.in, www.tnmaritime.com, www.tamilship.com ஆகிய துறையின் இணைய தளங்களில் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

## 11. தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்கள்

நெடுஞ்சாலைத் துறையானது, தலைமைச் செயலகத்தில் உள்ள நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை முதன்மைச் செயலாளர் தலைமையில் செயல்பட்டு வருகிறது. அவரது தலைமையின் கீழ் திட்ட இயக்குநர், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம், திட்ட இயக்குநர், (சென்னை கன்னியாகுமரி தொழிற்தட திட்டம்) முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலை, இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் எட்டு தலைமைப் பொறியாளர்கள் வெவ்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றனர்.

மேலும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் தலைமைப் பொது மேலாளர் அவர்களின் கட்டுப்பாட்டிலும், தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் செயல் இயக்குநர் தலைமையிலும் தேர்வு செய்யப்பட்ட

சாலை மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்துகின்றன.

தமிழ்நாடு கடல்சார் வாரியம் மாண்புமிகு அமைச்சர் பொதுப்பணிகள் (கட்டிடம், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்) அவர்களின் தலைமையில் தலைமைச் செயலகத்திலுள்ள நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது.

துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலரின் கீழ், மாநில துறைமுக அலுவலர், துறைமுக அலுவலர், தலைமை கணக்கு அலுவலர் மற்றும் செயலாளர், செயற் பொறியாளர் (Civil) ஆகியோர் தனிப்பட்டபணிகளுடன் செயலாற்றி வருகின்றனர்.

பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகம் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறையின் கீழ் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தலைமையில் இயங்கி வருகிறது.

துறை அலுவலர்களின் தொடர்பு விவரங்கள் பின்வருமாறு

| வ. எண் | அலுவலர் | அலுவலக முகவரி | தொலைபேசி எண் |
|---|---|---|---|
| 1 | முதன்மைச் செயலாளர், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009. | 044-25670959 |
| **நெடுஞ்சாலைத்துறை** | | | |
| 2 | முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை | ஒருங்கிணைந்த தலைமைப் பொறியாளர் அலுவலகம், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகம், 76 சர்தார்படேல் சாலை, கிண்டி, சென்னை-600 025. | 044-22351099 |
| 3 | தலைமைப் பொறியாளர், கட்டுமானம் (ம) பராமரிப்பு | | 044-22350690 |
| 4 | தலைமைப் பொறியாளர், நபார்டு (ம) கிராமச் சாலைகள் | | 044-22350158 |

| வ. எண் | அலுவலர் | அலுவலக முகவரி | தொலைபேசி எண் |
|---|---|---|---|
| 5 | தலைமைப் பொறியாளர், திட்டங்கள் | | 044-22350655 |
| 6 | தலைமைப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை | | 044-22355701 |
| 7 | தலைமைப் பொறியாளர், பெருநகரம் | | 044-22351154 |
| 8 | தலைமைப் பொறியாளர், திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு | | 044-22352068 |
| 9 | இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் | நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், 76 சர்தார் படேல் சாலை, கிண்டி, சென்னை-600 025. | 044-22354851 |

| வ. எண் | அலுவலர் | அலுவலக முகவரி | தொலைபேசி எண் |
|---|---|---|---|
| 10 | திட்ட இயக்குநர், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம் | எண்.171 தெற்கு கேசவ பெருமாள்புரம், TNMB கட்டிடம், பசுமை வழிச்சாலை, சென்னை- 600 028. | 044-24954360 |
| 11 | தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் | | 044-24954360 |
| 12 | திட்டஇயக்குநர், சென்னை–கன்னியாகுமரி தொழிற்தட திட்டம் | சென்னை கன்னியாகுமரி தொழிற்தட திட்ட அலுவலகம், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகம், 76 சர்தார் படேல் சாலை, கிண்டி, சென்னை- 600 025. | 044-22350664 |
| 13 | தலைமைப் பொறியாளர், திட்ட இயக்குநர், சென்னை–கன்னியாகுமரி தொழிற்தட திட்டம் | | 044-22350610<br>044-22350664 |

| வ. எ ண் | அலுவலர் | அலுவலக முகவரி | தொலைபேசி எண் |
|---|---|---|---|
| 14 | கண்காணிப்புப் பொறியாளர், சென்னை எல்லைச் சாலை திட்டம் | | 044-22352906 |
| 15 | தலைமைப் பொறியாளர் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் | எண்.171, தெற்கு கேசவபெருமாள் புரம், TNMB கட்டிடம், பசுமை வழிச்சாலை, சென்னை-600 028. | 044-24952800 |
| 16 | செயல் இயக்குநர், தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் | எல்.எல்.ஏ கட்டிடம், 4வது மாடி, 735, அண்ணா சாலை, சென்னை-600 002. | 044-28543333 |

| வ. எ ண் | அலுவலர் | அலுவலக முகவரி | தொலைபேசி எண் |
|---|---|---|---|
| **தமிழ்நாடு கடல்சார் வாரியம்** | | | |
| 17 | துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் | எண். 171, தெற்கு கேசவ பெருமாள்புரம், பசுமை வழிச்சாலை, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை - 600 028. | 044-24950420 |
| **பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்** | | | |
| 18 | தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் | 692, அண்ணாசாலை, நந்தனம், சென்னை-600 035. | 044-24341108 |

**அரசு முதன்மைச் செயலாளர்,**
**நெடுஞ்சாலைகள் மற்றும்**
**சிறுதுறைமுகங்கள் துறை.**

# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

## மக்கள் சாசனம்

## தமிழ்நாடு அரசு

## 2022